அதனை ஊக்கப்படுத்தவும் கேட்டுக்கொள்கின்றேன். இவைபோன்று, இன்று சமூக அளவில் ஊடகத்துறையில் பணியாற்றிவரும் அனைவரையும் நாம் வாழ்த்துவோம்.

ஆகத்து 8 அகில உலகத் தொடர்பு நாளைப் பங்குகளில் பயனுள்ள விதத்தில் சிறப்பிக்க அன்பாய்க் கேட்டுக்கொள்கின்றேன். அந்நாளில் பெறப்படும் சிறப்புக் காணிக்கை மாதா தொலைக்காட்சியின் வளர்ச்சிக்காக மறைமாவட்டத்தால் அனுப்பப்படும். மறைமாவட்டப் பொருளரிடம் அதனை ஒப்படைக்குமாறு நினைவுபடுத்துகின்றேன்.

அனைவரும் நலம்பேணி வாழ்ந்திட இறை ஆசி வழங்குகின்றேன்.

கிறிஸ்துவின் மனநிலையில்,

+ SNazarene

**+ நசரேன் சூசை**
கோட்டாறு ஆயர்

***குறிப்பு:*** இச்சுற்றுமடல் 01-08-2021 ஞாயிறன்று எல்லா ஆலயங்களிலும் துறவியர் இல்லங்களிலும் திருப்பலியின் போது மக்களுக்கு வாசிக்கப்பட வேண்டும்.

**Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.**
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.
Phone : Off : +91 - 4652-278343, 279152, 279933
: Per : +91 - 4652-278868
Fax : +91 - 4652 - 278570
E-mail : kottardiocese@yahoo.co.in
Website : www.kottardiocese.org

No. C-12/2021 27-07-2021

# 55ஆவது அகில உலக சமூகத் தொடர்பு நாள்
# ஆகத்து 08, 2021

## இறை இயேசுவில் அன்புமிக்க சகோதரிகளே சகோதரர்களே!

இறைத் தந்தையின் அன்பை உலகிற்குக் கொண்டுவந்து சான்று பகர்ந்த ஊடகமாம் இயேசுவின் அருளும் அமைதியும் உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

மக்கள் நடுவில் நிலவி வந்த நேரடித் தொடர்பு முறையைக் கோவித் பெருந்தொற்றுக் காலம் மிகவும் பாதித்துவிட்டது. முன்னெப்போதும் இல்லாத அளவுக்குப் பிறரோடு தொடர்பு கொள்வதில் சமூகத் தொடர்புக் கருவிகளையே நாம் சார்ந்திருக்க வேண்டிய நிலையை அஃது உருவாக்கிவிட்டது. இணையவழித் தொடர்பு என்பது அதில் மிக முக்கிய பங்கை வகிக்கிறது. இணையவழி வகுப்புகள், இணையவழி வர்த்தகம், இணையவழிப் பதிவுகள், இணையவழிப் பணம் செலுத்துதலும் பெறுதலும் என அனைத்தும் தொலைவிலிருந்தே செய்துவிடலாம் என்ற சூழல் வந்துவிட்டது. நேர்நிலைத் தொடர்பு என்பது நிகர்நிலைத் தொடர்பு என மாறிவிட்டது. இதில் நிறைய சாதகங்களும் அதே வேளையில் பாதகங்களும் இருக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

## விவிலிய அனுபவங்கள்

இச்சூழலில்தான் இவ்வாண்டு ஆகத்து 8ஆம் நாளை 55ஆவது உலகச் சமூகத் தொடர்பு நாளாக நாம் சிறப்பிக்கின்றோம். இந்நாளுக்காக **"வந்து பாரும்"** (யோவா 1:46) என்ற மையச்சிந்தனையில் திருத்தந்தை பிரான்சிஸ் உலகுக்குச் செய்திமடல் ஒன்றை வழங்கியிருக்கின்றார். அதுபோலவே, யோவான் நற்செய்தியில், நத்தனியேலை இயேசுவிடம் பிலிப்பு அறிமுகம் செய்கின்றபோது நத்தனியேல் எழுப்பிய கேள்விக்குப் பிலிப்பு கூறிய பதிலாகும் 'வந்து பாரும்' (யோவா 1:46) என்பது. வந்து பார்த்த பின்பு நத்தனியேல் இயேசுவை இறைமகன் என உணர்ந்து நம்பினார். இயேசுவை நேரில் சந்தித்து

உரையாடிய சமாரியப் பெண்ணின் அனுபவமும் அதுபோலவே இருந்தது. அப்பெண் மட்டுமல்லாது, அவரின் ஊர் மக்களும் இயேசுவைத் தேடிவந்து சந்தித்து அவர் உலகின் மீட்பர் என அறிந்து நம்பிக்கை கொண்டார்கள் (யோவா 4:39-42). இவையெல்லாம் இயேசுவை நேருக்கு நேர் சந்தித்ததனால் ஏற்பட்ட அற்புதமான அனுபவங்கள். ஒரு நபரை அல்லது ஒரு நிகழ்வினைப் பிறரிடம் கேட்டறிவதைவிட நிகழ்வு நடந்த இடம், நேரம், சூழல், அங்குப் பேசப்பட்ட வார்த்தைகள் ஆகியவற்றை நேரில் சென்று துல்லியமாகக் கவனித்து உணர்தல் ஓர் உயர்ந்த அனுபவம் என்பதை நாம் மறுக்க இயலாது.

## ஊடகங்களின் ஆற்றல்

ஊடகங்கள் ஒரு மனிதனையோ ஒரு சமூகத்தையோ வடிவமைக்கும் ஆற்றல் உடையவை. "கருத்து வெளியீட்டாலும் தாக்கங்களாலும் நன்மைக்கு அல்லது தீமைக்கு இட்டுச்செல்லும் ஆற்றலுடையவர்கள் ஊடகவியலாளர்கள்" என இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் குறிப்பிடுகின்றது (சமூகத் தொடர்புக் கருவிகள், எண் - 11). மனிதனுடைய சிந்தனை உருவாக்கத்திலும் அவன் தீர்மானம் எடுப்பதிலும் ஊடகங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. சமூக மாற்றத்தில் அவை ஏற்படுத்தும் நேர்மறைத் தாக்கங்களைத் திரு அவை வரவேற்கிறது, பாராட்டுகிறது. அதேவேளையில், சமூக நிதர்சனங்களை நேரில் சென்று ஆய்வு செய்யாமல், குளிரூட்டப்பட்ட செய்தி உற்பத்தி அரங்கங்களில் நவீன தொழில்நுட்ப உதவியுடன் வளைத்துத் திரித்து வழங்கும்போது அவை போலிச் செய்திகளாக மாறி எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்திவிடுகின்றன. பலவேளைகளில் போலிச் செய்திகளும் வதந்திகளும் உண்மைகளைவிட அதிவிரைவில் மக்களைச் சென்றடைந்து ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

சமீப காலமாக ஊடகங்கள் வழங்கும் செய்திகளும் காட்சிகளும் பிறரை அழிப்பதற்காகத் திரித்துக் காட்டப்படுவதைக் காண்கின்றோம். விளம்பரங்களின் மூலம் சமூகத்தில் தீமை செய்கின்ற மனிதர்களை நல்லவர்களாக முதன்மைப்படுத்துவதும் நன்மதிப்பு மிக்கவர்களின் நற்பெயரைக் களங்கப் படுத்துவதும் அதிகார ஆணவத்திற்கு அடிபணிவதும் பணமுதலைகளுக்குச் சில ஊடகங்கள் விலைபோவதும் அதிகரித்து வருகிறது. இதனால் அவற்றின் முகம் கறைபடிந்து காணப்படுகிறது.

இந்நிலை மாறிட செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்கள், சமூகத்தால் ஓரம்கட்டப்பட்டுக் கடைகோடிகளில் வாழும் மக்களின் ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் ஆய்ந்தறிந்து அவற்றைச் செய்திகளாகவும் ஆய்வுக் குறிப்புகளாகவும் அளிக்கின்றபொழுது அவை நேர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தி மாற்றங்களுக்கு வழிவகுக்கின்றன. இஃது ஊடகங்களின் கடமையும் பொறுப்புமாகும். இதைத்தான் திருத்தந்தையின் செய்தி மடல் 'வந்து பாருங்கள்' என அழைக்கின்றது. இவ்வாறு வந்து பார்ப்பதில் சிரமங்களும் மிகுந்த சவால்களும், ஏன், ஆபத்துகளும்கூட இருக்கின்றன என்பதைத் திருத்தந்தை உணராமலில்லை.

## ஆள்வழி நற்செய்தி

கிறிஸ்துவின் நற்செய்தி "ஒருவரிடமிருந்து மற்றவருக்கு" என்று ஆள்வழியாகவே உலகம் முழுவதும் பரவியது. கிறிஸ்துவை அறிந்து, ஏற்றுக்கொண்டு அவருக்குச் சான்று பகர்ந்த சகோதர சகோதரிகளோடு மற்றவர்கள் கொண்ட நேரடித் தொடர்பினால்தான் பலர் கிறிஸ்துவிடம் ஈர்க்கப்பட்டனர். இத்தகையோரிடம் காணப்பட்ட இறைப்பற்றுதல், மனிதத் தன்மை, அன்பு, அவர்கள் பேசிப் பழகியவிதம் ஆகியவை மற்றவர்களுக்கு 'வந்து பாருங்கள்' என்ற அழைப்பை விடுத்தன. நாமும் இந்த மனநிலையோடு இக்கருத்தை உள்வாங்க இவ்வுலகச் சமூகத் தொடர்பு நாள் நம்மை அழைக்கின்றது.

இன்று அனைவரின் கரங்களிலும் தவழும் அலைபேசியின் செயலிகளில் தகவல்கள் குப்பைபோல் குவிந்து கிடக்கின்றன. உண்மைக்குப் புறம்பான தவறான தகவல்களால் மனித மாண்பும், ஆண் பெண் குடும்ப உறவின் புனிதமும் அனைத்துப் படைப்புகளின் உயரிய மதிப்பும் சீர்குலைக்கப் படுகின்றன. இவை எதிர்கால வளமான சமூகத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பதைப் புரிந்து, நன்மை பயக்கும் செய்திகளைப் பிறருக்குக் கொண்டு செல்வதில் ஊடகம் பயன்பட வேண்டும் என்ற உறுதியை இந்நாளில் ஏற்போம்.

## கோட்டாறு மறைமாவட்டத்தில் ஊடகப்பணி

நமது மறைமாவட்டத்தில் இப்பணியை முன்னெடுப்பது நாஞ்சில் நாதம் மற்றும் களரி மக்கள் பண்பாட்டு மையம் அடங்கிய சமூகத்தொடர்பு பணிக்குழு ஆகும். இவற்றின் பணிகளையும் பணியாளர்களையும் வாழ்த்துவோம். 'கலை வழி இறை மொழி' என்ற விருதுவாக்கோடு இப்பணி மக்களிடம் கொண்டு சேர்க்கப்படுகின்றது. இவற்றிற்கு இன்னும் வலுச்சேர்க்க நாஞ்சில் நாதம் தொலைக்காட்சியும் முனைந்து நிற்கிறது. இவற்றிற்கு நாம் ஆதரவளிப்போம். தமிழகத் திரு அவையும் இப்பணியினை மாதா தொலைக்காட்சி மூலமாக சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அதனைப் பார்த்துப் பயன்பெறவும் 'மாதம்தோறும் மாதாவுக்கு' என்கிற நன்கொடைத் திட்டத்தில் இணைந்து